# பாட இனிக்கும் பாடல்கள்



## தேர்ந்தெடுத்த சிறுவர் பாடல்கள்

ச.அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட இனிக்கும் பாடல்கள்

## தேர்ந்தெடுத்த சிறுவர் பாடல்கள்

கலாபூஷணம் கேணிப்பித்தன்
**ச.அருளானந்தம்** B.A.M.Lit. D.A. Phd.S.L.E.A.S

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : பாட இனிக்கும் பாடல்கள்

ஆசிரியர் : ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்)

வகை : சிறுவர் இலக்கியம்

உரிமை : ஆசிரியருக்கு

அட்டைப் படமும் படங்களும் : ச.அ.அருள்பாஸ்கரன் M.A (Fine Arts)

முதற்பதிப்பு : 24 - 01 - 2011

வெளியீடு : அருள் வெளியீட்டகம்
37 / 7, மத்திய வீதி,
உவர்மலை - திருகோணமலை.
தொலைபேசி இல: 026-2221507.

கிடைக்குமிடம் : லங்கா புத்தகசாலை.
F.L. 14.1. டயஸ் பிளேஸ்.
குணசிங்கபுரம்.
கொழும்பு-12.
தொ.பே. இல: 011- 2341942

ISBN : 978-955-98211-1-3

விலை : ரூபாய் 100/=

## சமர்ப்பணம்

வன்செயல்களினால் எல்லாவற்றையும் இழந்து, மீண்டும் கல்வியைத் தொடரும் சிறார்களுக்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

ஆ ர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...............


- எனது குடும்பம்
- அக்காவின் குடை
- பட்டம்
- பலூன்
- வானவில்
- அதிசயம்
- பயணம்
- பறவைகள்
- காகமும் தம்பியும்
- சுந்தரியின் ஆட்டுக்குட்டி
- முதியோரை மதிப்போம்
- யானையும் எறும்பும்
- எங்கள் நாடு
- ஐம்பொறிகள்
- திக்கு முக்குத் தாளம்
- வரவேற்கிறோம்
- உடலுறுப்புக்கள்
- பாட்டியின் பசு
- வெப்பத்தின் செயல்
- மும்மொழி கற்போம்
- எதுவீரம்
- அழகு மலைச்சாரல்
- பயிர் செய்வோம்
- தாவரம்
- தெரிந்து கொள்
- சின்ன ரோஜாவே
- அழகு பொங்கும் வீடு
- நட்சத்திரங்கள்.
- தினமுழைப்போம்
- காகமும் பசுவும்
- ஆடும் பொம்மை
- குளம்
- மிருகங்கள்
- காலை வணக்கம்
- வீடு செல்வோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதுரை

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கடந்த பல தசாப்பதங் களாக இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் பல்லாயிரக்கணக்கான சிறார்கள் கல்வியினைப் பெறமுடியாத சூழல் ஏற்பட்டது. நிலமை சீரானதும் இழந்த கல்வியை ஈடுசெய்வதற்கான முயற்சிகளில் யூனிசெவ் அமைப்பு மத்திய கல்வி அமைச்சினதும் மாகாண அமைச்சுக்களினதும் உடன்பாட்டோடு துரிதகற்றல் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப் படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

இரண்டு ஆண்டுகள் கற்கவேண்டிய முக்கிய பாடங்களை ஒருங்கிணைத்து ஒரு வருடத்தினுள் கற்கக் கூடியதாக பாடத்திட்டங்களைத் தயாரித்துள்ளது. இலங்கையில் நடைமுறையிலுள்ள பாடத்திட்டத்திலிருந்து பிசகாமல், பாடநூல்களில் உள்ள முக்கிய அம்சங்களை மட்டும் உள்வாங்கி இப்பாடத்திட்டத்தினைத் தயாரித்துள்ளமை விஷேட அம்சமாகும். பாடத்திட்டத்தோடு தொடர்புடையதாக சிறார்களின் மொழியறிவை விருத்தி செய்யுமுகமாக நல்ல பாடல்களின் அவசியத்தை இச்செயற்பாட்டுக்குப் பொறுப்பான விஷேட ஆலோசகர் திருமதி. சுசான் நிக்கல்சன் எடுத்துரைத்தார்.

அதன்விளைவே இந்நூல். இந்நூலில் உள்ள விடயங்களை அவருக்கு ஆங்கிலத்தில் விளக்கமாகச் சொன்னதும் இது நல்லதொரு முயற்சி என்று தனது பாராட்டைத் தெரிவித்தார். எனது பல தொகுப்புகளில் இருந்தும் நல்ல பாடல்களைத் தேர்ந்தெடுத்து இந்நூலில் தொகுத்துள்ளேன். மாணவர்கள் கற்றுப் பயன்பெறுவார்கள் என்ற நம்பிக்கையுடன் இதனை வெளியிடுகின்றேன்.

கேணிப்பித்தன் ச.அருளானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள வாசகர்களே . . .

நமது பிள்ளைகள் எவ்வளவுக் கெவ்வளவு வாசிக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சிந்திக்கிறார்கள். அதேபோல் நமது பிள்ளைகள் எவ்வளவுக் கெவ்வளவு எழுத முனைகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சிந்திக்கிறார்கள். இதுதான் உண்மை. நமது பிள்ளைகளை நன்றாக வாசிக்கப் பழக்க வேண்டும். ஆடவும் பாடவும், அபிநயம் செய்யவும், அதனை நயக்கவும் பெற்றோர்கள்தான் வீட்டில் தொடக்கி வைக்க வேண்டும். பிள்ளைகளுக்குப் படிக்கும் நேரத்தை நீங்கள்தான் ஒதுக்க வேண்டும். அவர்கள் படிக்கும் நேரத்தில் தொலைக்காட்சியைப் பார்ப்பதைத் தவிர்த்து விடுங்கள். நீங்களும் வாசித்தால்தான் பிள்ளைகளும் உங்களைப் பின்பற்றி வாசிப்பார்கள்.

பெற்றோருக்கு அடுத்து நிற்பவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்கள் பிள்ளைகளை வாசிக்கவும், எழுதவும் தூண்டவேண்டும். பெற்றோரினது சொற்களைவிடவும் பிள்ளைகளது மனங்களிலே ஆசிரியர்களது சொற்கள் எடுபடும். ஆழப்பதியும். பெரும்பாலும் மாணவர்கள் ஆசிரியர்களைத்தான் பின்பற்றுகிறார்கள். நீங்கள் சிறந்த வழிகாட்டிகள். ஆதலால் அவர்களை வாசிப்பில் ஈடுபட வைக்க வேண்டியது ஆசிரியர்களது கடமையாகும். நல்ல நல்ல நூல்களை வாசிக்கும்படி அறிவுறுத்துங்கள். அதேபோல் நல்ல நல்ல நூல்களை அவர்களுக்கு அறிமுகம் செய்யவும் வேண்டும்.

பலபெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் தமது செல்வங்கள் என்பதை மறந்து விடுகிறார்கள். தங்களையிட்டுக் கவலையில்லாது வாழ்பவர்கள்தான் நமது பிள்ளைகள். அவர்களை நல்லவர்களாக்க வேண்டிய பாரிய பொறுப்புப் பெற்றாரிடம் உள்ளது. நாங்கள் பல அறிஞர் பெருமக்களிடம் நல்ல நூல்களை எழுதும்படி கேட்டு அவற்றைப் பிரசுரம் செய்து தருகிறோம். இந்த நூலை எழுதியவர் ஆசிரியராக அதிபராகக், கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய எழுத்தாளர் திரு.ச.அருளானந்தம் ஆவார். இந்த நூல் பிள்ளைகளைச் சிந்திக்க வைக்கிறது. பாடசாலைக் கல்வியைப் பெறமுடியாது நிலையிலுள்ள பிள்ளைகளுக்காக இந்நூலினை எழுதியுள்ளார். இதனை வாங்கி உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்துப் படிக்கத் தூண்டுங்கள். உங்களது பிள்ளைகளின் நல்வாழ்வு உங்கள் கைகளில்தான் உண்டு.

நன்றி<br>
க.சதீஸ்<br>
முகாமையாளர்.<br>
லங்கா புத்தகசாலை<br>
கொழும்பு -12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது குடும்பம்



எங்கள் இன்பக் குடும்பம் - அதை
எண்ணும் போது இன்பம்
தங்கத் தாத்தா தலைமை - இனிது
தாங்கும் எங்கள் குடும்பம்




உழைத்து வருவார் அப்பா- அன்பு
ஊட்டி வளர்ப்பார் அம்மா
அழைக்க மாமா மாமி - வந்து
அன்பாய் முன்னே நிற்பார்

சின்னச் சின்னக் கதைகள் - தினம்
சேர்த்துப் பாட்டி சொல்வார்
அண்ணன் தம்பி அக்கா - சேர்ந்து
ஆடி வாழும் குடும்பம்



ஒன்று சேர்ந்து வாழ்ந்தால் - இந்த
உலகில் பெருமை பெறலாம்
என்று சொல்லும் பெரியோர் - இங்கு
இணைந்து வாழும் குடும்பம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்காவின் குடை

அக்கா கையில் ஒருகுடை
அடுத்த கையில் சிறுபொதி
அக்கா நடைக்கு ஏற்பவே
ஆடி அசைந்து நிமிருது




குதி உயர்ந்த செருப்புடன்
குதித்துக் குதித்து நடக்கிறாள்
குதித்து குலுங்கும் நடையதால்
குலுங்கி உடலும் தளருது.



கொழுத்தும் வெயிலை வடித்துமே
குளிர் தடவிக் கொடுப்பதால்
அழகுக் குடையும் அவள்கையில்
அலங் கரித்துக் கொள்ளுதாம்


மழை வெயிலும் ஒதுங்கிடும்
வடிவாய் கையுள் சுருங்கிடும்
மழைநீர் வடிந்து சொரிந்திடும்
மகிழ்ந்து அக்கா போகிறாள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் கட்டுவோம்



பட்டம் ஒன்று கட்டுவோம்
பறக்க விட்டுக் காட்டுவோம்
எட்டு மூலைப் பட்டத்தை
ஏற்றி விளை யாடுவோம்




மயிலைப் போல பட்டமாம்
வண்டு போன்ற பட்டமாம்
குயிலைப் போன்று வானிலே
கூவும் விண்ணும் கட்டுவோம்


வண்ணத் தாளை வெட்டுவோம்
வெட்டி அளவாய் ஒட்டுவோம்
கண்ணைப் பறிக்கும் நிறத்திலே
கட்டிப் பட்டம் ஏற்றுவோம்



நூலைக் கட்டிக் கொள்ளுவோம்
நுனியில் பிடித்துக் கொள்ளுவோம்
வாலை ஆட்டிப் பட்டமும்
வடிவாய்க் காற்றில் பறக்குதாம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலூான் பலூான்









தா தரிகிட தாதா
தா தரிகிட தாதா
பலூன்.... பலூன்... ஓ..ஓ
பலூன்.... பலூன்...

பாலன் மாமா வருகிறார்
பலூன்கள் தூக்கி வருகிறார்
கோலம் போட்ட பலூன்களை
கொண்டு வந்து காட்டுறார்

தலையில் பாம்பாய் ஆடுது
சத்தம் போட்டுக் காட்டுறார்
விலையில் பலதைக் காட்டுறார்
விரைந்து பலூனை வாங்கட்டாம்

கையில் மூன்று புடலங்காய்
கழுத்தில் நாலு கத்தரி
பையில் நிறையப் பலூனுண்டாம்
பணத்தைத் தந்து வாங்கட்டாம்.

சிவப்பு மஞ்சள் கருநீலம்
சிறந்த ஊதா செம்மஞ்சள்
உவக்கும் பச்சை நீலமும்
உள்ள பலூன் இருக்குதாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானவில்




கானம் குருவி பாடிட
கிழக்கில் பரிதி வந்தது
வானம் இருண்டு கொண்டது
மழையும் தூறிக் கொண்டது




இருண்ட மேகத் திரையினை
கிழித்துக் கதிர்கள் பாய்ந்தன
திரண்ட ஒளியின் நிறங்களை
திரட்டி வானில் சேர்த்தன

வில்லாய் மேற்கு வானிலே
வளைந்து காட்சி ஆனது
நல்ல ஊதா கருநீலம்
நீலம் பச்சை தெரிந்தது.

மஞ்சள் சிவப்பு செம்மஞ்சள்
மயங்க வைத்துக் கலைந்தது
நெஞ்சம் மகிழ்ந்து கொண்டது
நினைத்துப் பாட வைத்தது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயம் பார்




உப்புக் கடல் காற்று வந்து
ஊதும் காதிலே
கப்பல் ஆடிக் குதித்து நீந்தும்
கடலின் மடியிலே




இரும்புத் துண்டைக் கடலுள் போட
இறங்கித் தாழுது
துரும்பு ஒன்றைத் தூக்கிப் போடத்
துள்ளி மிதக்குது.




உப்பைக் கொஞ்சம் நீரில் போட்டால்
உடனே கரையுது
தப்பிக் கல்லை எறிந்து விட்டால்
தாழ்ந்து போகுது.



பாரம் உள்ள பொருள்கள் யாவும்
பதுங்கும் நீரினுள்
பாரம் இல்லா எந்தப் பொருளும்
பாடி மிதக்குமாம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணம்



சக்குப் புக்குச் சத்தம் போட்டு
சின்னக் கோச்சி போகுது
திக்கு முக்குத் தாளம் போட்டு
மாட்டு வண்டி ஓடுது




கரிய தாரின் வீதி மேலே
காரும் வஸ்சும் ஊருது
விரியும் நீலக் கடலின் மீதே
விரைந்து கப்பல் நீந்துது


நீல வானின் காற்றைக் கிழித்து
நீந்தி ஊர்தி பறக்குது
காளை மாடு இழுக்க வண்டி
குன்று குழியில் செல்லுது



கால் நடையில் சென்ற மனிதன்
கண்டு கொண்ட கல்வியால்
கால வெள்ளம் தன்னைக் கடந்து
காத தூரம் செல்கிறான்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பறவைகள்

குயில் அக்கா பாட்டுக்கு
மயில் அண்ணா அபிநயம்
மரங் கொத்தி மாமாவின்
மிரு தங்க வாத்தியம்



காகம் புறா கோழியும்
கிளி கொக்கு நாரையும்
நாகண வாய் வாத்துக்கள்
நடம் பயின்று பார்க்கினம்



கொண்டைக் கிளார் சிட்டுகள்
கூடும் புளுணிக் கூட்டங்கள்
பெண்டு நடை அன்னங்கள்
பின்னால் ஆடிப் பார்க்கினம்



கூவை கூவ ஆந்தையார்
கூடி மேளம் கொட்டுறார்
நாவை மடித்துக் கரிச்சானும்
விசில் அடித்து மகிழ்கிறார்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகமும் தம்பியும்



அடம் பிடித்துத் தம்பியும்
அழுத வண்ணம் இருந்தனன்.
உடன் உணவை ஊட்டவே
உபாயம் அம்மா தேடினள்

காகம் தன்னை நினைத்துமே
காகா என்று கூவினள்
காகம் பறந்து வந்தது
கண்ட தம்பி துள்ளினான்




சோற்றை அம்மா போட்டனள்
தத்திக் காகம் எடுத்தது
சோற்றை வாயில் ஊட்டினள்
தம்பி மகிழ்ந்து உண்டனன்.



தம்பி பிடிக்கப் போவதும்
தள்ளிக் காகம் இருப்பதும்
அம்மா உணவைக் கொடுப்பதும்
அழகுக் காட்சி தானடா









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரியின் ஆட்டுக்குட்டி



சுந்தரியின் ஆட்டுக் குட்டி
சுற்றிச் சுற்றி ஓடித்திரியும்
சுந்தரியின் செல்லக் குட்டி
சுந்தரியைச் சுற்றி யோடும்
(அ - ஆ - இ - ஈ - உ)




நாலு காலில் துள்ளியோடும்
நல்ல சின்ன ஆட்டுக்குட்டி.
மேலே நின்று பார்த்துப் பேசும்
'மே' மட்டும் சொல்லிக் காட்டும்.
(உ - ஊ - எ - ஏ - ஐ)




அங்கு மிங்கும் பாய்ந்து ஓடும்
ஆங்கிலத்தில் மாதம் சொல்லும்
சுந்தரியின் ஆட்டுக் குட்டி
சொந்தமான செல்லப் பிராணி
(ஐ - ஒ - ஓ - ஔ - ஃ)



கழுத்து மணி கீதம்பாடும்
காது இரண்டும் தாளம்போடும்.
இழுத்து சின்ன வாலையாட்டும்
எட்டிக் குதித்து மரத்திலேறும்.
(அ - ஆ - இ - ஈ - உ)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியவரை மதிப்போம்



தள்ளாத வயதுத் தாத்தா
தள்ளாடித் தள்ளாடி வந்தார்
உள்ளார்ந்த கவலையில் மூழ்கி
உடல்வாடி சோர்ந்துமே போனார்

களைப்பால் இளைத்தவர் இருந்தார்
கவலையில் சிக்கியே நொந்தார்
இளையவர் சிலபேர் வந்தார்
இரங்கியே உதவிகள் செய்தார்




ஒருவர் கையிலே தண்ணீர்
ஒருவர் பையிலே உணவு
இருவர் சேர்ந்துமே அவரை
இருக்கையில் அமரச் செய்தார்.

உணவினை உண்ணக் கொடுத்தார்
உதவிகள் செய்துநீர் கொடுத்தார்
பணமும் செலவுக்குக் கொடுத்து
பெரியவர் இல்லத்தில் சேர்த்தார்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானையும் எறும்பும்




காட்டில் வாழ்ந்த யானையார்
கடும் மதத்தில் ஆடினார்
'காட்டின் தலைவன் நானடா
கவனம் பணிந்து நடவுங்கள்'



சட்டம் போட்டு கத்தினார்
சாடி மரத்தை மோதினார்
எட்டி மிருகக் கூட்டத்தை
எதிர்த்து நின்று சாடினார்

மிருகம் எல்லாம் பயந்தன
விலகி ஓடி ஒளிந்தன
அருகில் செல்ல மறுத்தன
அலறிப் பாய்ந்து ஓடின



எறும்புத் தம்பி வந்தனர்
எட்டி முதுகில் தாவினர்
கறுத்த தும்பிக் கையிலே
கடிக்க யானை மடங்கினார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் நாடு

இலங்கைத் தீவு நம்நாடு - எழில்
இலங்கும் கடல் சூழ் நல்நாடு
துலங்கும் புகழ்சேர் மானிடர்கள் - பலர்
சூழ்ந்து வாழும் திருநாடு



சிங்கள தமிழர் முஸ்லிம்கள் - நல்
சீர்பெறு பறங்கியர் பழங்குடியும்
எங்கும் சேர்ந்து வாழ்ந்திடவே - நம்
இலங்கைத் தீவு இடமளிக்கும்



புத்தமும் இந்து இஸ்லாமும் - நல்ல
பழம்பெரும் கிறிஸ்தவ சமயங்களும்
நித்தமும் சேர்ந்தொன்றாய் சீர்பெறவே - நாம்
நிதமும் இறைவனைத் தொழுதிடுவோம்




மங்களம் சேர்க்கும் மாநதிகள் - பாய்ந்து
வயல்நிலம் செழிக்கும் வளநாடு
பங்கயப் பூம்புனல் நிறைகுளங்கள் - நிறைந்த
பழம்பெரும் நாடென வாழ்த்திடுவோம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐம்பொறிகள்


காதால் ஒலியைக் கேட்கின்றோம்
கண்ணால் உருவைப் பார்க்கின்றோம்
காதால் கண்ணால் புரிந்தவற்றை
கிரகித்து மனதில் பதியவைப்போம்.



பூக்களின் வாசம் காற்றில்வரும்
புரிந்து அவற்றை உணர்கின்றோம்
மூக்கே மோப்பம் செய்கிறது
மூளையில் பதிந்து வைக்கிறது.



நாக்குச் சுவையை நன்குணர்த்தும்
நாவும் வாயும் மொழிக்குதவும்
தாக்கும் காற்று மேனியெங்கும்
தடவி அளைந்து அறியச்செய்யும்



காதும் கண்ணும் வாய்மூக்கும்
காத்துப் போற்றும் உடலதுவும்
ஓதும் நமக்கு உலகறிய
உண்மை தெரிந்து உயர்வடைவோம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திக்கு முக்குத் தாளம்



திக்கு முக்குத் தாளம்
தினமும் போட்டு பாடு
தக்குப் புக்கு என்று
ததிங் கிணத்தோம் போடு



வலது கையை தூக்கு
வெளியில் நீட்டிக் காட்டு
வலது கையை விரைந்து
வடிவாய் உள்ளே கூட்டு




இடது கையைத் தூக்கு
இடமும் வலமும் திரும்பு
உடலை அசைத்து ஆடு
இதையே செய்து பாடு

திக்கு முக்குத் தாளம்
தினமும் போட்டு பாடு
தக்குப் புக்கு என்று
ததிங் கிணத்தோம் போடு



காலை மெல்ல மடிப்போம்
கையை வெளியே எறிவோம்
மேலும் தினமும் செய்வோம்
மகிழ்ந்து பாடி அசைவோம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்கிறோம்



வருக வருக என்று நாங்கள்
வரவேற்கிறோம் - உன்னை
வரவேற்கிறோம்



வந்து சேர்ந்து பாடியாட
வரவேற்கிறோம் - நாங்கள்
வரவேற்கிறோம்



அன்பான எங்கள் செல்வம்
அறிவாயா நீ - இதை
அறிவாயா நீ

இன்பம் பொங்க முறுவல் காட்டி
இங்கோடி வா - நீ
இங்கோடி வா



உன்னை நம்பி உலகம் இருக்கு
உணர்வாயா நீ - அதை
உணர்வாயா நீ

உணர்ந்து கொண்டு உயரவேண்டும்
ஓடோடி வா - கற்போம்
ஓடோடி வா



வந்து சேர்ந்து பாடியாட
வரவேற்கிறோம் - நாங்கள்
வரவேற்கிறோம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலுறுப்புக்கள்



தால லல்லா தாலல்லா
தால லல்லா தாலல்லா



சின்னத் தலை பத்திரம்
சின்னத் தோள் பத்திரம்
சின்ன முழங்கால் பத்திரம்
சின்னக் கால்விரல் பத்திரம்

சின்ன கண்கள் பத்திரம்
சின்ன காதுகள் பத்திரம்
சின்ன மூக்குப் பத்திரம்
சின்ன வாய் பத்திரம்




தால லல்லா தாலல்லா
தால லல்லா தாலல்லா

சின்ன நெஞ்சு பத்திரம்
சின்ன வயிறு பத்திரம்
சின்ன இடுப்புப் பத்திரம்
சின்ன உடம்பு பத்திரம்



தால லல்லா தாலல்லா
தால லல்லா தாலல்லா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டியின் பசு




பாட்டி பசுவை வளர்த்தவாம்
அ - ஆ - இ - ஈ - உ


பசுவில் பாலைக் கறப்பாவாம்
பாலைக் காய்ச்சிக் குடிப்பாவாம்
கொசுவைத் துரத்தி விடுவாவாம்
கோலம் போட்டு வைப்பாவாம்
உ - ஊ - எ - ஏ - ஐ



எங்கும் கன்றின் சத்தம் கேட்கும்
ம்மா..ம்மா என்றே கேட்கும்
இங்கொரு ம்மா அங்கொரு ம்மா
எங்கும் ம்மா என்றே சத்தம்
ஐ - ஒ - ஓ - ஔ - ஃ



பாட்டி பசுவை வளர்த்தவாம்
அ - ஆ - இ - ஈ - உ










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்ந்து வாழ்வோம்



ஆழிசூழ் இலங்கை எம்தீவு - இங்கு
அனைவரும் ஒன்றெனக் கூறு
மேழிபிடித் திடும் தொழிலே - நமக்கு
மேன்மை தரும் என்றேபாடு.



சாய்ந்து நிமிர்ந்திடும் மலைகள் - எங்கும்
சொரிந்திடும் பணப்பயிர் வளர்ப்போம்
பாயும் நதிக்கரை யோரம் - விளை
பயிரிட்டே விளைச்சலை பெறுவோம்



பகிர்ந்துண்டு வாழ்தலே மகிமை - நாம்
பாரினில் பெறுவது பெருமை
நகமும் சதையது போன்று - தினம்
நாமிங்கு வாழ்வதே சான்று

சீருற சேர்ந்திங்கு வாழ்வோம் - ஒன்றாய்
தினந்தினம் தென்றலாய் சேர்வோம்
போரும் பகையதும் வேண்டாம் - இந்தப்
பொன்னான வாழ்க்கையே போதும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெப்பத்தின் செயல்

வெப்பம் ஏறப் பொருள்யாவும்
விரிந்து அளவில் பெரிதாகும்
வெப்பம் பெற்ற நீர்நிலைகள்
வெளியில் ஆவி தனைவிடுமாம்




நீரில் வெப்பம் ஏற்றிவிட்டால்
நீரா விசக்தி வெளியாகும்
பாரில் உள்ளோர் பயன்பெறுவார்
பலவித நன்மைகள் உருவாகும்



இடியப்பம் பிட்டு இட்லியும்
இனிக்கும் மோதகம் கொளுக்கட்டை
பிடிக்கும் தீன்வகை அவித்துவிடும்
பெருமை நீராவிக் குண்டேதான்.



அழுக்குத் துணியைச் சீராக்கி
அகற்றும் வெள்ளாவித் தொழிலாகும்
இழுத்துத் தண்ட வாளத்தில்
இரைந்து புகைவண்டி ஓடவைக்கும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்மொழி கற்போம்






தாய் மொழி தமிழென்று பாடு - அது
தரணியில் உயிரென்று ஓது
தூய சிங்களம் மொழிகூறு - அதுநம்
சகோதர மொழியெனப் போற்று

உலக மொழியது ஆங்கிலம் - நாம்
உணர்ந்தே கற்று யர்வோமா
பலமொழி கற்பது பெருநன்மை - இந்த
பாரே வந்துனை வாழ்த்தும்



தமிழொடு சிங்களம் ஆங்கிலம் - என்ற
சிந்தனை நம்மவர்க்கு வேண்டும்
தமிழதை சிங்கள மக்களும் - சேர்ந்து
சிந்தையில் ஏற்றிட வேண்டும்



மும்மொழித் திட்டம் வேண்டும் - நம்
முன்னேற்றம் அன்றுதான் உதயம்
நம்மவர் மும்மொழி கற்றால் - அன்று
நம்மிலங்கை சுதந்திரம் காணும்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது வீரம்?



சரித்திரம் படித்தென்ன லாபம் - எல்லாம்
தரித்திரம் படைத்திடும் பாடம்
ஒருவரை கொல்லுதல் வீரமா? - புத்தர்
அறவழி நிற்பது வீரமா?




காற்றில் மறைந்துள்ள சக்தியை - நாம்
கண்டு பயன் கொள்ளுதல் வீரமாம்
சேற்றைக் கலக்கிப் பயிரிட்டு - அதில்
செல்வம் விளைப்பது வீரமாம்





காட்டாற்றை அணையிட்டுத் தடுத்து - அதில்
குளமதை அமைப்பது வீரமாம்
நாட்டில் விளைச்சலைக் கூட்டி - மக்கள்
நன்மைகள் பெறச்செய்தல் வீரமாம்



தண்ணீரில் மறைந்துள்ள மின்னினை - கண்டு
கனரக தொழில் செய்தல் வீரமாம்
கண்ணென உயிர்களைக் காத்தலே - எம்
கடமையென் றெண்ணுதல் வீரமாம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அழகு மலைச்சாரல்


நீல வானைத் தொடுவதற்கு
நிமிர்ந்து நிற்கும் மலையோரம்
நீல வானின் நிறம்பூசி
நீண்டு படுக்கும் நீர்நிலைகள்




மின்னல் வெட்டிப் பாய்வதனால்
வேண்டும் நைத ரசக்கலவை
மின்னல் கீற்றின் வழியோடு
வந்து நிலத்தில் கலந்திடுமாம்



சின்ன வண்ணச் செடிகளுக்கு
தேவையான கால நிலை
என்ன இல்லை என்றுசொல்லி
எழுந்து பூக்கள் ஆடுதுபார்



வான வில்லின் சாயல்எல்லாம்
வண்ணம் சேர்த்து எழில்கூட்டி
காணும் உள்ளம் கவர்ந்திழுக்கும்
காட்சி காணில் அற்புதமே






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர் செய்வோம்



வயல்நிலம் பரந்துமே கிடக்கு - அதில்
வளங்களும் புதைந்துமே இருக்கு
செயல்திறன் நம்மிடம் உண்டு - நம்
சிந்தையில் கொள்வதே இல்லை




தொழில் வளம் பெருக்கிட வேண்டும் - தொழில்
செய்வதில் முழுமனம் வேண்டும்
தொழிலதை மதித்திட வேண்டும் - நாட்டில்
சந்தையும் பெருகிட வேண்டும்



விளைபொருள் பெருக்கிட வேண்டும் - அதை
வெளிநாட்டுக்கு அனுப்பிட வேண்டும்
இளைஞர்கள் சக்தியைத் திரட்டி - ஒன்றாய்
இருகரம் பற்றியே வாழ்வோம்




பலகலை பயின்றிட வேண்டும் - நாம்
பண்பினில் உயர்ந்திட வேண்டும்
உலகிலே இலங்கையை நிறுத்தி - பெரும்
உயர்வினை பெறவழி செய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவரங்கள்




தாவர வகையைப் பார்தம்பி - அவற்றின்
தகவலைப் பற்றிக் கேள்தம்பி
தாவர வகைக்கும் உயிருண்டு - உணவைத்
தேடி உண்ணும் வழியுண்டு





நிலத்தின் அடியில் வேர்விடுமாம் - வேர்
வேண்டிய நீரை உறிஞ்சிடுமாம்
கலத்தின் வழியே இலைகளுக்கு - மெல்லக்
கடத்தும் தொழிலும் நடைபெறுமாம்.

இலைகளில் உள்ள பச்சையமும் - சூரிய
ஒளியில் உள்ள கதிரலையும்
இனிதே சேர்ந்து ஒளித் தொகுப்பும் - இலையில்
ஏற்பட மாப்பொருள் உருவாகும்.



மாப்பொருள் கலவழி மேற்செல்லும் - உள்ள
மரத்தண்டு கிளையிலை பகுதிகளும்
சாப்பிட வளரும் மரஞ்செடிகள் - இது
தொடர்ந்து நடக்கும் சங்கதியாம்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்




காலையில் சூரியன் உதிக்கிறது - அது
காலந் தாழ்த்தி உதித்ததுண்டா?
மாலையில் மேற்கே மறைகிறது - அது
வேறு திசையில் மறைந்ததுண்டா?

பூமியும் தனக்கென வழியமைத்து - வருசம்
பூராச் சுழன்று வருவதைப் பார்
பூமியும் சுழல்வதை நிறுத்தியதா - இல்லை
பூமியில் இராப்பகல் மாறியதா?




சந்திரன் தேய்ந்து வளர்வதைப் பார் - அது
தண்ணொளி தந்து ஒளிர்வதைப்பார்
அந்தரக் கோள்கள் அசைவதைப்பார் - அவை
அதனதன் வழியில் செல்வதைப்பார்.



உனக்கொரு கடமை உலகிலுண்டு அதை
உணர்ந்து செய்து முடிதம்பி
எனக்கொரு தம்பி இருக்கின்றான் - என்று
எண்ணி மகிழச் செய்தம்பி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னச் சின்ன ரோஜாவே



சின்னச் சின்ன ரோஜாவே
சிரிக்கும் வண்ண ராஜாவே
கண்ணின் மணியே ஓடிவா
கரும்பே தேனே ஆடிவா

வண்ணச் சட்டை போட்டுமே
வந்து நிற்கும் சிட்டுநீ
உன்னை வாழ்த்தி உலகமே
உறுதி கொண்டு நம்பணும்



மண்ணில் அன்பு மலரணும்
மனதில் தூய்மை விரியணும்
அன்பால் உலகை ஆளணும்
அறிவால் உயர்ந்து வாழணும்

ஓடிப் பாடி ஆடுவோம்
ஒன்றாய் சேர்ந்து பாடுவோம்
கூடிப் பாடி ஆடவா
கொடுப்புள் சிரித்து ஓடிவா









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகு பொங்கும் வீடு

அழகு பொங்கும் வீடு - எங்கள்
அப்பா தந்த வீடு
பழகி வாழும் வீடு - எம்மைப்
பாது காக்கும் வீடு



மெல்லக் காற்று வந்து - எங்கள்
மேனி தொட்டுப் போக
நல்ல யன்னல் கதவும் - சுற்றி
நாலு பக்கம் உண்டு


அப்பா வெளியில் போனால் - எங்கள்
ஆட்சி நடக்கும் வீடு
அப்பா தந்த செல்வம் - இது
அம்மா வாழும் இல்லம்



வெள்ளைச் சுவரின் மேலே - எம்
வண்ணப் படங்கள் ஓடும்
கள்ளத் தீனி எடுத்து - நாங்கள்
களித்து உண்ணும் வீடு.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்சத்திரங்கள்



நீல வானம் இரவு நேரம்
மின் விளக்குப் போடுது
கோல வண்ணப் பொட்டுக்களாய்
கோலம் போட்டுக் காட்டுது.



சின்னச் சின்னத் தீபங்களாய்
தெரியும் நட்சத் திரங்களே
மின்னி மின்னிக் கண்சிமிட்டி
விடிய விடியச் சிரிக்குது.

வானில் உயர இருந்துகொண்டு
வண்ணத் தீபம் ஏற்றியே
கூனல் நிலா வருவதற்கோ
கூடி இருந்து பார்க்குது



நிலவு வானில் பவனிவரும்
நேரம் சேர்ந்து கோலமாய்
உலவிவர அணி திரண்டோ
உயரச் சேர்ந்து நோக்குது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தினமுழைப்போம்

காலையில் கோழி கூவுமடா - விடி
காகம் கரைந்து எழுப்புமடா
சோலைகள் எங்கும் குயிலின்குரல் - அந்தச்
சுந்தர இசையுடன் சேருமடா





பூனைநாய் நிமிர்ந்து வால்முறுக்கும் - புதுப்
பூக்களும் மலர்ந்து தேன்சுரக்கும்
தானைத் தலைப்பசு முன்நடக்கும் - பின்
தொடர்ந்துமே மாடுகள் தான்நடக்கும்


சுறுசுறுப் பாகி எறும்புகளும் - ஒன்று
சேர்ந்துமே உணவினைச் சேகரிக்கும்
விறுவிறு எனவே தேனிகளும் - விரைந்து
வதையினில் தேனைச் சேரத்தடைக்கும்



நல்லவை நாமும் அறிந்திடுவோம் - என்றும்
நம்மது சூழலே துணையாகும்
நல்லவை கற்று நாமுயர்வோம் - நம்
நாடு செழித்திடத் தினமுழைப்போம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகமும் பசுவும்




பனை மரத்தின் நிழலிலே
படுத்துப் பசுவும் கிடந்தது
அணுகிக் காகம் வந்துமே
அமர்ந்து பசுவில் இருந்தது

பசுவின் காதில் காகமும்
பதமாய் ஏதோ சொன்னது
பசுவும் சுகமாய் அசைந்துமே
புரண்டு புரண்டு கிடந்தது




வாலில் முதுகில் செவியுளும்
வயிறு கழுத்து இமையிலும்
காலில் தொடையில் உடலிலும்
கண்டு உண்ணி எடுத்தது.

வயிறு நிரம்பிக் காகமும்
மரத்தில் ஏறிக் கரைந்தது
அயர்ந்து பசுவும் எழுந்தது
ஆட்டி வாலைச் சென்றது









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடும் பொம்மை



ஆடும் பொம்மை பாருங்கள்
ஆடி யாடிக் காட்டுது
பாடும் கேட்டுப் பாருங்கள்
பாடி வாங்கிக் கொள்ளுங்கள்



ஆட்டம் ஆடிக் காட்டுது
அசைந்து அசைந்து நெளியுது
நோட்டம் விடும் கண்களால்
நோக்கி நம்மைப் பார்க்குது



கண்ணை உருட்டிக் காட்டுது
கைகால் தட்டிக் காட்டுது
மண்ணைக் கையால் கிள்ளுது
வட்டம் அடித்து நீட்டுது

சட்டை போட்டு நடிக்குது
சடையும் பின்னிக் கிடக்குது
குட்டிக் கரணம் அடிக்குது
கூடி வந்து பாருங்கள்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளம்



நல்ல மழை பெய்தது
நிலம் நனைந்து சிலிர்த்தது
வெள்ளம் சேர்ந்து ஓடிநீர்
உள்ள குளத்தில் நிறைந்தது.




கெண்டை வாளை மீன்வகை
குதித்துப் பாய்ந்து திரியுது
கண்ட கொக்கு மீன்கொத்தி
களித்துப் பறந்து வருகுது


வெள்ளை சிவப்புத் தாமரை
விரிந்து மலர்ந்து கிடக்குது
கொள்ளை அழகுக் குளத்திலே
காற்று நடனம் காட்டுது



குளத்து மதகு புகுந்துநீர்
குதித்து வாய்க்கால் ஓடுது
களத்தில் நெல்லுக் குவியுது
களிப்பால் உள்ளம் துள்ளுது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகங்கள்





ஆடும் மாடும் பூனையும்
அன்பாய் வளரும் வீட்டிலே
ஓடும் புள்ளி மான்மரை
ஒதுங்கி வாழும் காட்டிலே




காட்டில் யானை அலைந்திடும்
கரடி ஆடி நடந்திடும்
சேட்டை செய்யும் மந்திகள்
சேர்ந்து மரத்தில் கூத்திடும்




பன்றி பாய்ந்து பதுங்கிடும்
பதுங்கும் புலியும் பாய்ந்திடும்
நன்றி உள்ள மிருகமாம்
நாயும் வாலை ஆட்டிடும்

விரைந்து குதிரை ஓடிடும்
விடியக் கழுதை பாடிடும்
விரளும் காட்டு எருமைகள்
விழுந்து மோதிப் போரிடும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலை வணக்கம்




காலை வணக்கம், காலை வணக்கம்
காலை வணக்கம் சொல்வோம்

காலை வணக்கம், காலை வணக்கம்
கடவுள் வாழ்த்துப் படிப்போம்



காலை வணக்கம், காலை வணக்கம்
எப்படி உங்கள் நலம்
காலை வணக்கம், காலை வணக்கம்
நலமாக நாமும் இருப்போம்

காலை வணக்கம், காலை வணக்கம்
கவலை இன்றிப் படிப்போம்
காலை வணக்கம், காலை வணக்கம்
சந்தோ சமாக இருப்போம்



காலை வணக்கம், காலை வணக்கம்
ஒன்றாய்ச் சேர்ந்து படிப்போம்
காலை வணக்கம், காலை வணக்கம்
ஆடிப் பாடி மகிழ்வோம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு செல்வோம்



வீடு செல்வோம், வீடு செல்வோம்
விரைந்து வேலை முடிப்போம்

வீடு செல்வோம், வீடு செல்வோம்
வகுப்பை ஒழுங்கு செய்வோம்



வீடு செல்வோம், வீடு செல்வோம்
விளை யாடியே மகிழ்ந்தோம்

வீடு செல்வோம், வீடு செல்வோம்
வணக்கம் கூறிச் செல்வோம்.

வீடு செல்வோம், வீடு செல்வோம்
வழியைக் கடந்து செல்வோம்




வீடு செல்வோம், வீடு செல்வோம்
விரைந்து வீடு செல்வோம்

வீடு செல்வோம், வீடு செல்வோம்
மீண்டும் நாளை வருவோம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நூல்கள்

1. இன்பக் கனிகள் - சிறுவர் பாடல்
2. பாட்டுப் பாடுவோம் - சிறுவர் பாடல்
3. காகமும் தம்பியும் - சிறுவர் பாடல்
4. பாடி ஆடுவோம் - சிறுவர் பாடல்
5. கடலும் காவிரியும் - சிறுவர் பாடல்
6. சின்னச் சின்ன பாட்டு - சிறுவர் பாடல்
7. மனதுக்கினிய பாட்டு - சிறுவர் பாடல்
8. ஆனந்தமான பாட்டு - சிறுவர் பாடல்
9. சகோதரராய் வாழ்வோம் - சிறுவர் பாடல்
10. இசையோடு அசைவோம் - சிறுவர் பாடல்
11. தம்பிக்கொரு பாட்டு - சிறுவர் பாடல்
12. அறிவைத் தரும் பாடல்கள் - சிறுவர் பாடல்
13. ஆடி மகிழ்வோம் - சிறுவர் ஆடலும் பாடலும்
14. பூஞ்சிட்டுக்கள் - சிறுவர் கதைகள்
15. சின்னத் தேவதைகள் - சிறுவர் கதைகள்
16. கண்ணனும் இராமனும் - சிறுவர் கதைகள்
17. தங்க மாம்பழம் - சிறுவர் கதைகள்
18. சிறகு வைத்த கதைகள் - சிறுவர் கதைகள்
19. சாதனையாளர் - சிறுவர் கதைகள்
20. அற்புதமான வானம் - சிறுவர் கதைகள்
21. பேனாவினால் பேசுவோம் - சிறுவர் கட்டுரை
22. சின்னச் சின்ன சிறுவர் கதைகள் சிறுவர் கதைகள்
23. வித்தகன் விபுலானந்தன் - சிறுவர் ஆய்வு இலக்கியம்
24. பளிங்குத் தீவு - சிறுவர் நாவல்
25. பயங்கொள்ளலாகாது பாப்பா சிறுவர் நாவல்
26. காட்டில் கலவரம் - சிறுவர் நாவல்
27. உல்லாசப் பயணம் - சிறுவர் நாவல்
28. மனதில் உறுதி வேண்டும் - சிறுவர் நாவல்
29. அந்த மாணவர் உலகம் - சிறுவர் நாவல்
30. துணிச்சல் மிக்க சுந்தரி - சிறுவர் நாவல்
31. சுனாமி தந்த உறவு - சிறுவர் நாவல்
32. கும்பத்துமால் - சிறுகதைகள் - தொகுதி
33. அந்த ஆவணி ஆறு - சிறுகதைகள் - தொகுதி
34. வம்மிப் பூ - சிறுகதைகள் - தொகுதி
35. கேணிப்பித்தன் கதைகள் - சிறுகதைகள் - தொகுதி
36. ஏன் வந்தாய்? - சிறுகதைகள் - தொகுதி
37. வாக்கினிலே இனிமை வேண்டும் - நாவல்
38. கனவு மெய்ப்பட வேண்டும் - நாவல்
39. நெருங்கின பொருள் கைப்பட வேண்டும் - நாவல்
40. கேணிப்பித்தன் கவிதைகள் - கவிதைத் தொகுதி
41. அனர்த்த முகாமைத்துவம் ஒரு அனுபவ அணுகுமுறை - ஆய்வு
42. பாட இனிக்கும் பாடல்கள - சிறுவர் பாடல்
43. பார்த்தேன் கதைகள் - சிறுவர் கதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN : 978-955-98211-1-3
Price : Rs. 100/-

Printed by :
NISAAN PRINTERS (PVT) LTD. No. 64N, Peer Saibo Street, Colombo-12. TEL : 2439401, 4997221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org